A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN


4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 15 / 2022**

திரு. R. சோமசுந்தரம்,
அப்போலோ இல்லம்,
343, மெயின் ரோடு, பெண்ணாடம்,
திட்டக்குடி தாலுக்கா – 606 105.
அலைபேசி: 94423 78143

………மேல்முறையீட்டாளர்
(திரு. R. சோமசுந்தரம்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/திட்டக்குடி,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தெற்கு தெரு, திட்டக்குடி – 601 106.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப/பெண்ணாடம்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11KV பெண்ணாடம் துணை மின் நிலைய வளாகம்,
பெண்ணாடம் – 606 105.

...... எதிர்மனுதாரர்கள்
(திருமதி M. வள்ளி, செயற்பொறியாளர்/ இ&ப/திட்டக்குடி
திருமதி D. விஜயலட்சுமி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப/பெண்ணாடம்)

**மனு பெறப்பட்ட நாள்: 24-01-2022**

**கேட்புரை நாள்: 06-07-2022**

**ஆணை நாள்: 13-07-2022**

24.01.2022 அன்று பெறப்பட்ட திரு R. சோமசுந்தரம், அப்போலோ இல்லம், 343, மெயின் ரோடு, பெண்ணாடம், திட்டக்குடி தாலுக்கா – 606 105 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 15/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட

மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 06.07.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது மின் இணைப்பு எண். 20-080-003-52-இல் MD excess என்ற காரணத்தால் வசூலித்த தொகையை வட்டியுடன் திரும்ப வழங்குமாறும், தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு ரூ.10,000/- வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண். 20-080-003-52-இல் MD exceed செய்யப்பட்டதாக கூறி வசூலித்த தொகையை திரும்ப வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் மாத கணக்கீட்டில் MD 1KW ஆக 5/2019 மற்றும் 7/2019-இல் பதிவு செய்யப்பட்டதால் அதற்குரிய கட்டணங்கள் வசூலிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தனது மின் இணைப்பில் MD exceed செய்யப்பட்டதாக கூறுவது தவறும் எனவும் அதிகமாக வசூல் செய்யப்பட்ட தொகையை திரும்ப வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் கடலூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 03.09.2021 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கடலூர் மின்பகிர்மான வட்டம், 18.12.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

கடலூர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 18.12.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் தீர்ப்பு</u>:*

*வழக்கெழு வினா 1*

*அனுமதிக்கப்பட்ட மின்பளுவைவிட கூடுதலாக மின்பளு உபயோகப்படுத்தப்பட்டால் அதற்கான அபிவிருத்த கட்டணம் வசூல் செய்யப்பட வேண்டுமா?*

*தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல் விதி தொகுப்பு விதி 47(1) மற்றும் (2)–ன்படி ஆணையத்தால் அவ்வப்போது வரையறுக்கப்படும் அபிவிருத்தி கட்டணத்தை புதிய மற்றும் கூடுதல் மின்பளு கோரும் விண்ணப்பங்களுக்கு வசூலிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*தற்போது மனுதாரரின் மின் இணைப்பில் அனுமதிக்கப்பட்ட மின்பளுவைவிட கூடுதலாக மின்பளு உபயோகப்படுத்தப்பட்டதாக 2 தடவை பதிவாகி உள்ள காரணத்தினால் கூடுதல் மின்பளு விண்ணப்ப பதிவு கட்டணம் மற்றும் அதற்கான இதர கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும். எனவே மனுதாரரின் மின் இணைப்பில் கூடுதல் மின்பளுவிற்கான உரிய கட்டணம் வசூலிக்கப்பட்டது சரியே என இம்மன்றம் முடிவு செய்கிறது.*

*வழக்கெழு வினா–2*

*மின் துண்டிப்பு தொகை மனுதாரரிடம் இருந்து வசூலிக்கப்பட்டது சரியா?*

*தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல் விதி தொகுப்பு விதி 14(2)–ன்படி, மின் துண்டிப்பு தொகை மற்றும் மறு மின் இணைப்பு தொகை வசூலிக்கப்பட்டது சரியே என இம்மன்றம் முடிவு செய்கிறது.*

*வழக்கெழு வினா–3*

*வேறு பரிகாரங்கள் பெற மனுதாரர் தகுதியானவரா?*

*மேற்கண்ட வழக்கெழு வினா–1 மற்றும் 2 ஆனது மனுதாரருக்கு எதிராக முடிவு கண்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்க கூடியதில்லை என்று இம்மன்றம் முடிவு செய்கிறது.*

*ஆகவே மனுதாரர் தாக்கல் செய்த மனு மேலே கூறிய எழுவினாக்களின் முடிவில் இந்த மனு தள்ளுபடி செய்கிறது. செலவு தொகை எதுவும் இல்லை."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 06.07.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. R. சோமசுந்தரம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி M. வள்ளி, செயற்பொறியாளர்/இ&ப/திட்டக்குடி மற்றும் திருமதி D. விஜயலட்சுமி, உதவி செயற்பொறியாளர்/இ&ப/பெண்ணாடம் கடலூர் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 MD 1 KW என்பது 7/2019 மாதம் பதிவாகி உள்ளதாகவும், ஆனால் இதற்கு 19.4.2021 தேதியிட்ட அறிவிப்பு தனக்கு 27.7.2021 அன்று தான் 19 மாதங்கள் தாமதமாக வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் மின் பகிர்மான கழக விதிகள் படி இது நடந்த 1 மாதத்திற்கு தனக்கு அறிவித்து அடுத்த மின் நுகர்வு பில்லில் சேர்க்கப்பட வேண்டும் எனவும், காலம் தாழ்த்தி விதிகள் கடைபிடிக்கப்படாததால் இந்த நோட்டீஸ் செல்லாதது எனவும் ஆகவே இது தொடர்பாக தன் அடிப்படை எதிர்ப்பை தெரிவிப்பதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 MD 1 KW ஆக பதிவு செய்யப்பட்ட காரணத்தினால், அதாவது 05/2019 மற்றும் 07/2019 மாத கணக்கீட்டில் 1.KW ஆக பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் MD List வந்ததாகவும் அதற்கு update செய்யப்பட்டு 5.5.2021 auto slip கணினியில் ஏற்பட்டதாகவும் Consumer Ledger வாயிலாக தெரியவருவதாக கூறுவதை ஏற்க இயலாது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 Computer Generated Notice 16.04.2021 அன்று பிரிவு பொறியாளரால் எடுக்கப்பட்டு 19.4.2021 அன்று கையொப்பமிட்டு மின் நுகர்வோர் வீட்டிற்கு இளமின் பொறியாளர்/நகரம்/பெண்ணாடம் அவர்கள் நேரடியாக சென்றதாகவும் வீடு பூட்டி

இருந்ததாக கூறும் வாதத்தை ஏற்க இயலாது எனவும், ஒரு பிரிவு பொறியாளர்க்கு பிரிவின் பல வேலைகள் இருக்கும் பட்சத்தில் Notice அளிக்க இளமின் பொறியாளரே நேரில் வந்தார் என்று எதிர் உறையில் கூறுவது இட்டு கட்டிய கதையாக உள்ளதாகவும், பிரிவில் பணியாளர்களே இல்லையா? இளமின் பொறியாளர்க்கு Notice அளிப்பதுதான் வேலையா? என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேல்முறையீட்டாளர் மன்றத்தில் புகார் அளித்திருக்கும் மின் இணைப்பு வணிக மின் இணைப்பு எனவும், அதாவது கடை மின் இணைப்பு இந்த கடை காலை 9.00 முதல் இரவு 8.00 வரை திறந்திருக்கும் எனவும், இந்த நிலையில் வணிக மின் இணைப்பு பயன்படுத்தும் கடையில் Notice தராமல் வீட்டில் வந்து பார்த்ததாக கூறுவது மற்றும் Notice அளிக்காமல் காலம் தாழ்த்தி நுகர்வோரிடம் முறைகேடாக பணம் வசூலித்ததை மறைக்க வாதம் வைத்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேல்முறையீட்டாளர் 27.7.2021 அன்று தான் Notice தனக்கு அளிக்கப்பட்டதாகவும், அதற்கான கட்டணத்தை 28.7.2021 அன்று செலுத்தியுள்ளதாகவும், தனக்கு Notice அளித்தும் அதனை கட்ட தனக்கு உரிய கால அவகாசம் அளிக்கவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 தனக்கு அளிக்கப்பட்ட Consumer Ledger-இல் 5.5.2021 அன்று Load revised செய்யப்பட்டதாகவும் auto slip 05.05.2021 அன்று தான் கணினியில் ஏற்றப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர் 16.4.2021 அன்று Computer generated Notice எடுக்கப்பட்டதாகவும், 19.4.2021 அன்று Notice கையொப்பம் இட்டுள்ளதாகவும் கூறுவதை ஏற்க இயலாது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 காரணம் 21.4.2021 அன்று எதிர்மனுதாரர் இம்மின் இணைப்பை surprise inspection செய்துள்ளதாகவும், அதில் Normal எனவும் MD 0.21kw என பதிவு செய்துள்ளதாகவும், அவ்வாறு இருக்கையில் Consumer Ledger ஆய்வு செய்தால் 05.05.2021 அன்றுதான் auto slip ஏற்பட்டு அன்றே Sl.No.0802021473/ 05.05.2021 அன்று ரூ.1238/- auto slip generate ஆகியுள்ளதாகவும், இவ்வாறு இருக்கையில் இளமின் பொறியாளர்/நகரம்/பெண்ணாடம் 16.4.2021 Notice எடுத்தாகவும், 19.4.2021 அன்று கையொப்பம் இட்டுள்ளதை ஒரு வாதத்திற்கு ஒப்புக் கொள்வோம் ஆயின் தனக்கு நோட்டீஸ் அளித்த நாள் 27.7.2021 அன்றுதான் கணினியில் slip issue

செய்திருக்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். சம்மந்தமில்லாமல் 5.5.2021 அன்று auto slip பதிவாகி உள்ளதை ஏற்கும்படியாக இல்லை எனவும் தனக்கு மின்சார வாரியம் மூலம் வழங்கப்பட்ட Consumer Ledger–இல் இவை அனைத்தும் பதிவாகி உள்ளதாகவும், எனவே எதிர்மனுதாரர் பொய்யான எதிர் வழக்குறை தாக்கல் செய்து மன்றத்தை தவறான முறையில் வழிநடத்தியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 எதிர்மனுதாரர் தனது மின் இணைப்பை ஆய்வு செய்யும் போதே MD Exceeded என்றால் ஒரு மாதத்தில் தகவல் தெரிவித்திருக்க வேண்டும். எதிர் வழக்குறையில் இளமின் பொறியாளர்/ பெண்ணாடம் 16.4.2021 மற்றும் 19.4.2021 அன்று Notice Issue செய்த பிறகே உதவி செயற்பொறியாளர் / நகரம் / பெண்ணாடம் அவர்கள் தனது மின் இணைப்பை ஆய்வு செய்துள்ளதாகவும், இதில் இருந்து தன்னிடம் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு தேவையில்லாமல் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 14.6.2021 அன்று பிரிவு அலுவலகம் வந்து மின் கட்டணம் செலுத்தும்போது கூட தனது மின் இணைப்பில் MD Exceeded List தொகை பாக்கி உள்ளது என்று யாரும் தெரிவிக்கவில்லை எனவும், அவ்வாறு தெரிவித்திருந்தால் அதற்கான விளக்கம் என்னவென்று அன்றே கேட்டிருப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி 1 KW 140/– என வணிக மின் இணைப்புக்கு இருமாதத்திற்கு ஒருமுறை Fixed charges வசூலிக்கப்பட வேண்டும் எனவும், தனது Consumer Ledger ஐ ஆய்வு செய்கையில் தான் பெற்ற sanction load 0.48 KW க்கு 11/2015 முதல் 10/2017 வரையில் 0.48 x140= 67.20 காசு மட்டுமே Bimonthly வசூலிக்கப்பட்டு வந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 தன்னிசையாக 10/2017 ஆண்டிற்கு பிறகு 03/2021 வரையில் 0.48 KW ரூ.140/– வசூலிக்கப்பட்டது தவறானது எனவும், அப்படி வசூலிக்கும் பட்சத்தில் தன்னுடைய மின் இணைப்பின் மின் பலுவை மின்சார வாரியம் 1KW என பதிவு செய்திருக்க வேண்டும் அவ்வாறு செய்யாமல் 0.48 KW–க்கு ரூ.140/– வசூல் செய்தது தவறான நடைமுறை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 மேலும் 20.12.2019 மாதம் தான் தன்னுடைய மின் இணைப்புக்கு High Quality Meter இருந்து Static Meter with MD Recording Meter பொருத்தியுள்ளதாகவும், High Quality Meter பொறுத்தப்பட்ட 05/2019 மற்றும் 07/2019 மாத கணக்கீட்டில் எப்படி 1KW மேல்முறையீட்டாளர் பயன்படுத்தியுள்ளதாக கணினியில் பதிவு செய்தார்கள் என்பது புரியாத புதிராக உள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 அனுமதிக்கப்பட்ட 0.48 KW High Quality Meter–இல் பார்க்க முடியுமா அதனை விட அதிகமாக பதிவிட்டதாக 1KW எப்படி High Quality Meter–இல் பார்க்க முடியும் அதனை எப்படி கணினியில் பதிவிட முடியும் என்பதை ஆராய்ந்தால் மின்சார வாரியம் தவறான முறையில் மேல்முறையீட்டாளர் பயன்படுத்தாத 1KW ஐ கணினியில் பதிவு செய்துள்ளதாகவும், 20.12.2019 அன்று Static Meter மாற்றிய பிறகு தான் மன்றத்தில் முறையிட்ட வரையில் Recorded MD 250 watts–க்கு மேல் பதிவு ஆக வில்லை என்பது வாரியத்தால் தனக்கு அளிக்கப்பட்ட Consumer Ledgerஐ ஆய்வு செய்தால் தெரியும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 07/2021 மாதத்தில் 1 KW என பதிவு செய்யப்பட்டது PMC Previous Assessment Account Billing 07/2019 மாத கணக்கீட்டை அப்படியே ஏற்றப்பட்டதால் High Quality Meter–இல் பார்க்க முடியுமா அப்போது தவறாக பதிவு செய்யப்பட்ட 1 KW அப்படியே carry over ஆகியுள்ளதாகவும், அதற்கு அடுத்த மாதம் 09/2021 மாதத்தில் தனது Recorded MD 0.21 KW மட்டுமே பதிவு ஆகியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 மேல்முறையீட்டாளர் உபயோகிக்காத மின் பளுவிற்கு MD Exceed charges வசூலித்ததே தவறு எனவும், இதில் Development charges, Testing fees, Registration Cum processing charges CGST, SGST, rounding off என ரூ.1207/–ஐ மின்சார வாரியம் நேர்மைக்கு மாறாக தன்னிடம் வசூலிக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.16 தனக்கு அனுமதிக்கப்பட்ட 480 watts–க்கு அதிகமாக மின் பளு உபயோகப்படுத்தியிருந்தால் மேற்கண்ட கட்டணத்தை கட்ட தயார் எனவும், வாரியம் தவறுதலாக வசூலித்ததோடு இல்லாமல் DC RC Fees–ம் வசூலித்தது அதனைவிட தவறான செயல் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.17 High Quality Meter–இல் பொருந்தியுள்ள காலமான 05/2019, 07/2019 மாதத்தில் sanction load–ஐ விட மின்சார வாரியத்தால் தவறுதலாக கணினியில் ஏற்றப்பட்டதாகவும், வாரிய விதிகளை மீறிய செயல் எனவும், வாரியம் தவறு செய்துவிட்டு நுகர்வோரிடம் தவறான முறையில் முறைகேடாக தன்னிடம் வசூலிக்க வேண்டிய அவசியம் என்ன என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.18 மேலும் தவறான முறையில் வசூலிக்கப்பட்டது மட்டும் இல்லாமல் அவை சரி என மன்றம் முடிவு செய்துள்ளதை இதனை ஏற்கும்படியாக இல்லை எனவும், எனவே தன்னிடம் முறைகேடாக வசூலிக்கப்பட்ட தொகை அனைத்தையும் திரும்ப வழங்குவதோடு, அதற்கான வட்டியும் சேர்த்து வழங்குமாறும் தனக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு உரிய பரிகாரம் வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.19 தன்னிடம் ரூ.1207/– தவறாக வசூலிக்கப்பட்டது என்பது தெரிந்தே மன்றம் உணர்ந்திருந்தும் மின் துண்டிப்பு தொகை மறு மின் இணைப்பு தொகை வசூலிக்கப்பட்டதும் தவறு ஆகும் அதற்கான பரிகாரம் தேவை எனவும், இளமின் பொறியாளர்/நகரம்/பெண்ணாடம் தன்னுடைய மின் இணைப்பை ஆய்வு செய்யவில்லை என்பது Consumer Ledger ஐ பார்த்தால் தெரியும் எனவும், Notice அளிக்க பிரிவு அதிகாரி வரும் நிலையில் தன்னுடைய மின் இணைப்பை ஆய்வு செய்யாதது ஏன் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.20 High Quality Meter–இல் Recorded MD பதிவு ஆகாத நிலையில் Record MD என 1 KW பதிவிட்ட வாரிய பணியாளர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? வாரியத்தில் இவ்வளவு குறைபாடு இருக்கையில் உண்மை தீர்ப்பு கிடைக்கும் என்று மாவட்ட மன்றத்தில் முறையிட்டால் பொய்யான எதிர் வழக்குறை தாக்கல் செய்து தன்னை அலைகழித்து மன்றத்தை ஏமாற்றி உண்மைக்கு மாறாக தீர்ப்பு பெற்றதன் காரணம் என்ன என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.21 வழக்கு நடந்தது 21.9.2021 அன்று தனக்கு தீர்ப்புறை 26.12.2021 அன்று 95 நாட்கள் காலதாமதமாக கிடைக்க பெற்றதாகவும், இது காலம் கடந்த கிடைக்கப் பெற்ற தீர்ப்பு இதற்கு பரிகாரம் வேண்டும் எனவும் ஆகவே, தான் மனு எதுவும் கொடுக்காத நிலையில் பதிவுக் கட்டணம் வாங்கியது தவறு எனவும், தன்னுடைய மின் இணைப்பை ஆய்வு ஏதும் அதிகாரிகளால் செய்யாத நிலையில் Testing Fees வாங்கியது தவறு எனவும்,

தன் மின் இணைப்பு துண்டிக்கப்படாத போது மறு இணைப்பு (Reconnection) என்று தொகை வாங்கியது தவறு எனவும், நோட்டீஸ் கொடுத்து தான் பெற்று கொண்டு 15 தினங்களுக்குள் தொகை செலுத்தியதால் கூடுதலாக BPSC வசூல் செய்தும் தவறு எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.22 ஒரு மாதத்திற்குள் தனக்கு அறிவிப்பு கொடுக்காதது பகிர்மான கழக விதி, வழிகாட்டிகளுக்கு முறையற்றதாகவும், ஆகவே சித்ர நோட்டீசே தவறு என்பதால் தன்னிடம் முறைதவறி வசூல் செய்த அனைத்து தொகை வட்டியுடனும் மன உளைச்சலுக்கு ரூ.10,000/- வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திட்டக்குடி கோட்டம், பெண்ணாடம் உபக்கோட்டம், நகரம் பெண்ணாடம் பிரிவிற்குட்பட்ட மின் இணைப்பு எண்.080-003-52/TF V-இல் கணக்கீட்டாளர் கணக்கீடு செய்யும் போது 05/2019 மற்றும் 07/2019 மாத கணக்கீட்டில் MD 1 ஆக பதிவு செய்யப்பட்ட காரணத்தால் MD Exceeded Services List-இல் மேற்கண்ட மின் இணைப்பு வந்ததால் பிரிவு பொறியாளர் 080-003-52 என்ற மின் இணைப்பில் 0.64 கிவா லிருந்து 1 கிவா ஆக 5.5.2021-இல் update செய்தபோது அதற்குரிய கட்டணங்கள் 5.5.2021 அன்று Auto slip ஆக கணினியில் ஏற்றப்பட்டுள்ளதாக Consumer Ledger No. 0802021473 வாயிலாக தெரியவருகிறது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 அந்த கட்டணங்கள் அனைத்தும் தமிழ்நாடு மின்சார வாரிய வழங்கல் விதிகள் எண். Regulation 5(2)(ii)C(iii)(A) இன் படி மேற்கண்ட மின் இணைப்பில் வரும் அடுத்த மாத கட்டணத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்குரிய அறிவிப்பு கடிதம் computer generated notice 16.04.2021 அன்று பிரிவு பொறியாளரால் எடுக்கப்பட்டு 19.04.2021 தேதியிட்ட கடிதம் மின் நுகர்வோரிடம் அளிப்பதற்கு, மின் நுகர்வோர் வீட்டிற்கு இளமின் பொறியாளர் /நகரம்/பெண்ணாடம் அவர்கள் சென்ற போது மின்நுகர்வோர் வீடு மற்றம் கடைகளும் பூட்டப்பட்டிருந்ததாகவும், உடனே மின் நுகர்வோரை அலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியபோது மின் நுகர்வோர் சென்னையில் இருப்பதாகவும் தற்போது கொரானா காலம் என்பதால் மின்நுகர்வோர் தன்னை பார்க்க வர வேண்டாம் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 அதனை தொடர்ந்து 10.5.2021 முதல் தமிழ்நாடு அரசு முழு ஊரடங்கு அறிவித்தால், மேற்கண்ட மின் இணைப்பு மற்றும் எந்த ஒரு மின் இணைப்பிலும் கணக்கீடு பணி மேற்கொள்ளப்படவில்லை எனவும், 05/2021 மற்றும் 06/2021 மாதங்களில் PMC வாயிலாக மின்கட்டணம் செலுத்த அனைத்து மின்நுகர்வோர்களும் அறிவுறுத்தப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதன்படி மேற்கண்ட மின் இணைப்பு எண். 080–003–52–இல் PMC கட்டணம் கடந்த 10.6.2021 அன்று மின்நுகர்வோரால் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அவ்வாறு செலுத்தும் போதே இந்த மின் இணைப்பில் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை விபரங்கள் மின் நுகர்வோருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த தொகையை முழுமையாக செலுத்தாமல் மின்கட்டணத்தை மட்டும் 10.6.2021 அன்று செலுத்தியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 இருந்த போதிலும் ஏற்கனவே அச்சடிக்கப்பட்ட அறிவிப்பு கடிதத்தை 27.07.2021 அன்று மின் நுகர்வோருக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும், அதனை பொற்றுக்கொண்ட நுகர்வோர் மேற்படி மின் இணைப்பில் மறுநாள் 28.07.2021 அன்று கட்டணம் ரூ.1207/– செலுத்தியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மின் நுகர்வோருக்கு இளமின்பொறியாளர் அவர்களால் அறிவிப்பு கொடுக்கப்பட்டு போதுமான கால அவகாசமும் அளிக்கப்பட்டு மேற்கண்ட கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேலும் மின்நுகர்வோர் 7.8.2021 நாளிட்ட மனுவில் வசூல் செய்யப்பட்ட தொகையை திருப்பி வழங்க வேண்டும் என்று கோரியதின் அடிப்படையில் தகவலுக்காகவும் தக்க மேல் நடவடிக்கைக்காகவும் 19.8.2021 அன்று மேற்பார்வை பொறியாளர்/கமிபவ/கடலூர் அவர்களுக்கு கடிதம் வாயிலாகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேற்கண்ட மின் இணைப்பில் 0.64 கிவா லிருந்து 1 கிவா ஆக மாற்றம் செய்வதற்கு முன்பும் மாற்றம் செய்த பிறகும் நிலைக்கட்டணம் (Fixed charges) ரூ.140/– தமிழ்நாடு மின்சார வாரிய வழங்கல் விதி எண் 4(i)(ii)இன்படி வசூல் செய்யப்பட்டு வருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மின் பளு முறைப்படுத்தியதின் அடிப்படையில் New Miscellaneous charges as Hon'ble TNERC M.P.No.7 of 2018 order dated 3.10.2019 இன்படி Development charges Rs.1000/- per KW, Registration cum processing charges Rs.100/- மற்றும் Testing fees Rs.75/- அதற்குரிய 9% CGST & 9% SGST Rs.32/- மொத்தம் Rs.1207/- auto generated slip மூலம் வந்த தொகையை வாரிய விதிமுறைகளின்படி நுகர்வோரிடம் வசூல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 மின் இணைப்பு எண் 080-003-52/TF-V மின் நுகர்வோரிடமிருந்து மேம்பாட்டு கட்டணம் (Development charges ) தமிழ்நாடு மின்சார வாரிய பகிர்மான விதி Regulation 47 இன் படி மின்நுகர்வோர் மற்றும் மனுதாரராசிய திரு. சோமசுந்தரம் அவர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டுள்ளது முறையானது. அதனால், அவர் கோரியுள்ளவாறு திரும்ப பெற சாத்தியமில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

i) இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் மின் அளவி High Quality Meter அல்லது Static Meter-ஆக என்ற கேள்வி எழுகிறது மற்றும் MD Excess ஆனவுடன் 5/2019 மற்றும் 7/2019 எனில் உடனே MD excess அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளதா?

ii) MD கூடுதல் கட்டணம் மற்றும் மின் துண்டிப்பு கட்டணம் வசூலித்தது சரியா?

iii) மேல்முறையீட்டாளருக்கு நிவாரணம் வழங்க முடியுமா?

8.0 **<u>கேள்வி 1-ற்கான தீர்வு</u>**:

8.1 High Quality Meter இருப்பதை எதிர்மனுதாரர் ஒப்பு கொண்ட பிறகு MD excess என தெரியாத நிலையில் கூடுதல் மின் மிகை கட்டணம் வசூலித்தது சரியா என்ற கேள்வி எழும் நிலை ஏற்படுகின்றது.

**8.2** எதிர்மனுதாரர் கூடுதல் மின்பளுவிற்கான மிகை கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக நான் ஒரு தாழ்வழுத்த மின்னிணைப்பில் அனுமதிக்கப்பட்ட மின்பளுவை விட கூடுதலாக பயன்படுத்தப்படும் மின்பளுவிற்கு விதிக்கப்படும் மிகை மின் தேவைக் கட்டணம் குறித்து அறிய தமிழ்நாடு

மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி 5(2)(ii)(c)(II)-ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**(2) Excess demand charge***

*Whenever the consumer exceeds the sanctioned demand, excess demand charge shall be:—*

*(i) ''''''*

*(ii) In case of LT supply,*

*(a) For Domestic and Agricultural category of service, the excess demand charges shall not be applicable.*

*(b) For other categories of LT services with contracted demand equal to or less than 18.6 KW (25 HP), the excess demand charges shall not be applicable where the connected load is equal to or less than the contracted demand.*

*Note: For services with contracted demand less than or equal to 18.6 KW (25 HP), whenever the consumer's connected load exceeds the contracted demand, the licensee shall install meters with demand recording facility and bring the consumer under the scope of excess demand chargeable category. After installation of the meter, if the recorded demand is in excess of contracted demand, the existing demand, shall, after intimation to the consumer, be revised to the level of recorded demand and all relevant charges applicable for extension of additional demand shall be included in the next bill. No excess demand charge is leviable till such time the licensee installs meter with demand recording facility and bring the consumer under the scope of excess demand chargeable category.*

*(c) For the remaining LT services other than those service connections covered in (a) and (b) above, when the contracted demand is in excess of 18.6KW (25HP) and for such of those consumers whose contracted demand is less than 18.6 KW (25HP) but opted for having meters with demand recording facility, the excess demand charges shall be -,*

*(I) Where the recorded demand does not exceed 112 KW, for every KW or part thereof in excess of the sanctioned demand, at the rate of 1% of the total energy charges;*

*(II) ''''''''''*

*(III) Where the recorded demand exceeds the sanctioned demand for the second and subsequent times,-*

*(A) In case the recorded demand has not exceeded 112 KW, the existing load sanction shall, after intimation to the consumer, be revised within one month of the second occurrence to the level of recorded demand and all the relevant charges applicable to the additional load shall be included in the next bill;"*

**8.3** மேற்கண்ட விதிகளின்படி ஒப்பளித்த (sanctioned) மின்தேவையை மிஞ்சிவிட்டால் நுகர்வோர் செலுத்த வேண்டிய மிகை மின் தேவைக் கட்டணம் தாழ்வழுத்த (LT) மின்

வழங்கலைப் பொறுத்த வரையில் வீட்டு மற்றும் வேளாண்மை மின்னிணைப்புகளுக்கு மிகை மின் தேவைக் கட்டணம் பொருந்தாது எனவும், 18.6 கி.வா (25 HP) அளவுக்குச் சமமாகவோ அல்லது அதற்கும் குறைவாகவோ ஒப்பந்த மின் தேவையும் இணைந்துள்ள மின்சுமையும் உள்ள பிறவகை தாழ்வழுத்த மின்னிணைப்புகளுக்கு மிகை மின் தேவைக்கட்டணம் பொருந்தாது எனவும் அறிய முடிகிறது.

8.4 மேலும் மேற்குறிப்பிட்டுள்ளவற்றை தவிர பிற தாழ்வழுத்த மின்னிணைப்புகளுக்கு, ஒப்பந்த மின் தேவை 18.6 கி.வா (25 HP) அளவுக்கும் அதிகமாகவும் அல்லது ஒப்பந்த மின்தேவை 18.6 கி.வா (25 HP) அளவுக்குக் குறைந்திருந்தாலும் மின் தேவையை பதிவு வசதி பெற்றுள்ளவர்கள் பதிவான மின்தேவை 112 கி.வா அளவினும் கூடுதலாகாத போது ஒப்பந்த மின் தேவையிலும் மிகையாகவுள்ள ஒவ்வொரு கி.வா அளவுக்கும் அல்லது அதன் பகுதிக்கும் மொத்த ஆற்றலுக்கான கட்டணத்தில் 1 விழுக்காடு மிகை மின் தேவைக் கட்டணம் கட்ட வேண்டும்.

8.5 மூன்றாவதாகவும் அதற்கு அடுத்தும் ஒப்பந்த மின் தேவையினாலும் பதிவாகும் மின் தேவை மிகையாகும் போது, பதிவான மின்தேவை 112 கி.வா அளவினும் மிகுதியாகாத போது, நுகர்வோருக்கு அறிவிப்பு தந்துவிட்டபிறகு நிலவும் சுமை ஒப்பளிப்பை இரண்டாம் முறை நேர்விலிருந்து ஒரு மாதத்துக்குள் பதிவான மின்தேவைக்கு மாற்றி விட்டு கூடுதல் சுமை தருவதற்கு விதிக்கப்படும் அனைத்து கட்டணங்களையும் அடுத்த பட்டியலில் உடன் சேர்க்க வேண்டும் எனவும் அறிய முடிகிறது.

மேலும் மேற்கண்ட நுகர்வோரின் மின் இணைப்பிலுள்ள மின் அளவி MD excess விதித்த காலகட்டத்தில் High Quality Meter ஆக இருப்பதால் MD பயன்பாடு தெரியாது என்பதால் MD excess என்பது பொருந்தாது. இதை எதிர்மனுதாரர் ஒப்பு கொண்டு விட்டார்.

8.6 5/2019 மற்றும் 7/2019 ஆகிய மாதங்களில் High Quality Meter இருந்த நிலையில் கூடுதல் MD கட்டணத்தை மேல்முறையீட்டளாரிடம் வசூலிக்க நோட்டிஸ் அனுப்பியது தவறாகபடுவதால் மேல்முறையீட்டாளரின் வாதம் சரியென்றுபடுகின்றது.

9.0 <u>கேள்வி 2–ற்கான தீர்வு</u>:

MD கூடுதல் கட்டணம் மற்றும் மின்துண்டிப்பு கட்டணம் வசூலித்தது சரியா என்ற வாதத்திற்கு High Quality Meter இருந்த மின் இணைப்பிற்கு 5/2019 மற்றும்

7/2019 ஆகிய மாதத்தில் 1 KW என்ற பதிவு தவறானதால் அதற்கான வசூலித்த தொகை அனைத்தும் தவறு, எனவே அதை முறைப்படி மின்நுகர்வோர்க்கு திருப்பி வழங்க உத்தரவிடப்படுகிறது.

10.0 **<u>கேள்வி 3–ற்கான தீர்வு</u>**:

10.1 மேல்முறையீட்டாளருக்கு நிவாரணம் வழங்க முடியுமா என்ற கேள்விக்கு தன்னிடம் முறை தவறி வசூல் செய்த அனைத்து தொகையும் வட்டியுடனும் மற்றும் மன உளைச்சலுக்கு ரூ.10,000/– வழங்குமாறு கோரியுள்ளார். இது சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி **7(11)**ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"7. .....................*
>
> *.............................*
>
> *(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

**10.2** மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது.

**10.3** எனவே, ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது.

ஆகவே தமிழ்நாடு மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறை விதி 21(6)–இன்படி நுகர்வோர் முறையீடுக்கு பதில் நடவடிக்கை எடுக்காததால் இழப்பீடு ரூ.250/– (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) மேல்முறையீட்டாளருக்கு வழங்கலாம் என தீர்வு செய்யப்படுகிறது.

**11.0 பகுப்பாய்வு:**

கடலூர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் High Quality மின் அளவி இருப்பதை முறையீடு நடந்த அன்றே தீர ஆராய்ந்திருந்தால் மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு மன்றத்தில் மேல்முறையீட்டாளர் முறையிட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. ஆகவே இதை கருத்தில் கொண்டு செயல்பட அறிவுறுத்தப்படுகின்றது.

**12.0 முடிவுரை:**

12.1 மேல்முறையீட்டாளர் கோரப்பட்ட கோரிக்கைகள் அடிப்படையில் கூடுதலாக வசூலிக்கப்பட்ட தொகை அனைத்தும் தவறாக வசூலிக்கப்பட்டதால் கூடுதல் மின்சுமை கட்டணம் அத்துடன் சேர்த்து பெறப்பட்ட DCRC மற்றும் BPSC கட்டணங்களை மேல்முறையீட்டாளருக்கு மின் வழங்கல் விதி 12(2)–இன்படி திரும்ப வழங்குமாறு உத்தரவிடப்படுகிறது.

12.2 எதிர்மனுதாரர் நுகர்வோர் முறையீட்டுக்கு பதில் நடவடிக்கை எடுக்காததால் இழப்பீடாக ரூ.250/– (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) மேல்முறையீட்டாளருக்கு வழங்க ஆணையிடுகிறேன்.

12.3 மேற்கண்ட தீர்வுகளை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை எதிர்மனுதாரர் இந்த தீர்வு கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

12.4 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 15/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

(ந. கண்ணன்)
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்:

1. திரு. R. சோமசுந்தரம்,
அப்போலோ இல்லம்,
343, மெயின் ரோடு, பெண்ணாடம்,
திட்டக்குடி தாலுக்கா – 606 105.
அலைபேசி: 94423 78143

2. செயற்பொறியாளர்/ இ&ப/திட்டக்குடி,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தெற்கு தெரு, திட்டக்குடி – 601 106.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&ப/பெண்ணாடம்,
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11KV பெண்ணாடம் துணை வளாகம்,
பெண்ணாடம் – 606 105.

4. மேற்பார்வை பொறியாளர், – By email
கடலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கேப்பர் மலை, கடலூர் – 607 004.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.